இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

1876 - 2026

150 ஆண்டுகள்

# பாதுகாவலன்

# PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 150 | இதழ் : 01 | திகதி : 18.01.2026 | விலை : 50.00


## 150 ஆவது அகவையில் 'பாதுகாவலன்'



இலங்கையில் முதல் கத்தோலிக்க தமிழ் பத்திரிகையும், யாழ் மறை மாவட்ட அதிகாரபூர்வ வாரப்பத்திரிகையுமான **பாதுகாவலன்** அதன் முப்பொன்விழாவை இவ்வாண்டில் காண்பது பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இப்பத்திரிகையானது 1876 ஆம் ஆண்டு பெப்பிரவரி 19ம் திகதி முதல் வெளியீட்டினை வெளியிட்டிருந்தது. இப்பத்திரிகையானது **"கத்தோலிக்க பாதுகாவலன்" "சத்திய வேத பாதுகாவலன்"** எனும் பெயர்களில் ஆரம்பிக்கப்பட்டு பிற்பட்ட காலத்தில் "பாதுகாவலன்" எனும் பெயரில் வெளிவந்தபோதிலும் இடைப்பட்ட சொற்பகாலம் இப்பத்திரிகையானது "காவலன்" எனும் பெயரிலும் வெளிவந்துள்ளது. இப்பத்திரகையின் வளர்ச்சியில் பல ஆயர்கள், அருட்பணியாளர்கள் -ஆசிரியர்களாகவும், பல பொதுநிலை எழுத்தாளர்கள்- உதவி ஆசிரியர்களாகவும், கட்டுரை எழுத்தாளர்களாகவும், நிருபர்களாகவும் பயணித்தனர் மறைமாவட்டக் குருக்கள், துறவிகள், பொதுநிலையினரினதும் அரும்பெரும் பணியினாலேயே **பாதுகாவலன்** பத்திரிகையானது 150 ஆண்டுகளைக் கடந்து சிகரம் தொட்டுள்ளது.

இவ் முப்பொன்விழா ஆண்டில் நாம் பல சிறப்பு நிகழ்வுகளையும், போட்டிகளையும் நடாத்த திட்டமிட்டுள்ளோம். அவை பற்றிய விபரங்கள் உரியகாலத்தில் வாசக நெஞ்சங்களாகிய உங்களுக்கு அறியத் தருவோம். குறிப்பாக, பாதுகாலன் பத்திரிகை அதன் வளர்ச்சி, தற்கால சமூகத் தொடர்பாடல் வளர்ச்சி மற்றும் அதன் வகிபாகம் தொடர்பான கருத்துச் செயலமர்வு ஒன்றும், முன்னாள் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், நிருபர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு ஒன்றும் இவ் முப்பொன்விழாவின் சிறப்பு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன. 150 ஆண்டுகளைக் கடந்து பயணிக்கும் **"பாதுகாவலன்"** பத்திரிகையின் வளர்ச்சியில் பங்கேற்று வீட்டுக்கொரு பாதுகாவலன் எமது மறைமாவட்டத்தில் சென்றடைய எம் பணியில் இணைந்து பயணிக்க வாசக நெஞ்சங்களாகிய உங்களை அழைத்து நிற்கின்றோம்.

அருட்பணி. எஸ். ஏ. றொஷான்
பாதுகாவலன் ஆசிரியர்


கத்தோலிக்க பாதுகாவலன்
THE JAFFNA
Catholic Guardian.

பாதுகாவலன் இரண்டாம் பதிப்பு

## யாழ் மறைமாவட்டம் 2026ம் ஆண்டை சமூகத் தொடர்பாடல் ஆண்டாக அறிவிப்பு





யாழ். மறைமாவட்டத்தில் இவ்வருடம் கடைப்பிடிக்கப்படும் சமூகத் தொடர்பாடல் ஆண்டின் ஆரம்ப நிகழ்வுகள் கடந்த 11ஆம் திகதி யாழ் மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும் நடைபெற்றன. யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் விசேட திருப்பலியும் புதிய ஆண்டு அங்குரார்ப்பண நிகழ்வும் இடம்பெற்றன. இத்திருப்பலியில் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம், புனித வளனார் அச்சக முகாமையாளர் அருட்தந்தை எயின்ஸிலி றொசான், மறைநதி கத்தோலிக்க ஊடகமைய இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரிபன், ஆகியோர் இணைந்து செபித்தனர்.

யாழ். மறைமாவட்த்தில் இயங்கும் கத்தோலிக்க ஊடகங்களான பாதுகாவலன் அச்சகம், மறைநதி கத்தோலிக்க ஊடகமையம், Bishop சவுந்தரம் மீடியா, இறை ஒளி, Holy Mary, தமிழ் Best, கடவுளின் மனிதம் ஆகிய ஊடக பணியாளர்களும் கலந்துகொண்டனர். "சமூக தொடர்பாடலினூடாக அமைதியின் ஆண்டை உருவாக்குவோம்" என்னும் கருப்பொருளில் இவ்வருடம் யாழ். மறைமாவட்டத்தில் சமூகத்தொடர்பாடல் ஆண்டு சிறப்பிக்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகர் யாழ். ஆயருடன் சந்திப்பு



இலங்கை நாட்டிற்கான அவுஸ்ரேலியா நாட்டு உயர் ஸ்தானிகர் மத்தியு டொக்வேர்த் அவர்கள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பு கடந்த 15ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

## செங்கல்பட்டு ஆயர் பேரருட்தந்தை நீதிநாதன் டி மசனெட் இறையியலகத்திற்கு விஜயம்



இந்தியா நாட்டின் தமிழ்நாடு செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை நீதிநாதன் அவர்கள் யாழ். மறைமாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் டி மசனெட் இறையியலக குழுமத்தை சந்தித்து அங்கு சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வு கடந்த 10ஆம் திகதி இடம்பெற்றது.

## தேசிய ரீதியில் அன்பிய மாநாடு



தேசிய அன்பிய ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்ட அன்பிய மாநாடு கடந்த 12, 13ஆம் திகதிகளில் கொழும்பு தேவத்தை பசிலிக்காவில் நடைபெற்றது. தேசிய இயக்குநர் அருட்தந்தை பிரிய ஜெயமான்ன அவர்களின் தலைமையில் ஆணைக்குழுவுக்கு பொறுப்பான காலி மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை றேமன்ட் விக்ரமசிங்க அவர்களின் வழிநடத்தலில் இம்மாநாட்டில் கருத்துரைகள், குழுச்செயற்பாடுகள், கலந்துரையாடல் என்பன இடம் பெறறன. இந்நிகழ்வில் மறைமாவட்ட அன்பிய இயக்குநர்கள், பிரதிநிகளென பலர் கலந்து கொண்டதுடன் யாழ். மறை மாவட்டதிலிருந்து மறைமாவட்ட அன்பிய இயக்குநர் அருட்தந்தை றொனால்ட் சுஜீவன் அவர்களின் வழிகாட்டலில் அருட்தந்தை அஜந்தன், அருட்தந்தை லியான்ஸ் அருட்சகோதரி மேரி ஆரோக்கியநாதன் மற்றும் திரு. திருமதி தேவராஜா பிறேமா ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

## கிறிஸ்தவ ஒற்றுமைக்காகச் செபிக்கத் திருத்தந்தை அழைப்பு!

கிறிஸ்தவ ஒற்றுமைக்கான இறைவேண்டல் வாரம் தொடங்குவதை முன்னிட்டு, உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கச் சமூகத்தினர் கிறிஸ்தவர்களுக்கிடையேயான ஒற்றுமைக்காகத் தீவிரமாகச் முழுமையான செபிக்குமாறு திருத்தந்தை லியோ அழைப்பு விடுத்துள்ளார். இந்தச் செப வாரத்தின் இருநூறு ஆண்டுகால வரலாற்றை நினைவுகூர்ந்த திருத்தந்தை, திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்ட, "உடல் ஒன்றே, தூய ஆவி ஒன்றே" (எபே4:4) எனும் இறைவாக்கே இந்த ஆண்டின் கருப்பொருளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். இதற்கான செபங்கள் ஆர்மீனிய அப்போஸ்தலிக்கத் திரு அவையின் ஒருங்கிணைப்பில் தயாரிக்கப்பட்டுள்ளன. கிறித்தவர்களிடையே காணக்கூடிய, முழுமையான ஒருமைப்பாடு நிலவவேண்டும் என்பதே இந்தச் செப வாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

முப்பொன் விழா

# எமது எண்ணம்

## சமூகத் தொடர்பாடல் ஆண்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டுவோம்!

இன்றைய உலக ஒழுங்கு குழப்படைந்துள்ள நிலையில், சிலவல்லரசுநாடுகள்கையாண்டுவரும் உத்தி, சிறிய நாடுகளுக்கும் அரசு அற்ற தேசிய இனங்களுக்கும் பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளன.

இப் பின்னணியில் தான, உலக அளவில் உள்ள கத்தோலிக்க திரு அவையின் பொறுப்பும் செயற்பாடுகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. இனம் - மதம் என்ற வரையறைகளைக் கடந்து உலக அளவில் மக்களையும் அரசுகளையும் ஒழுங்கமைத்து அமைதிப்படுத்தும் அணுகுமுறைகளில் கத்தோலிக்க திரு அவை ஈடுபட்ட ஒரு காலம் உண்டு. இன்றுவரை கூட அவ்வாறான ஆளுமையும் செயற்திறனும் கத்தோலிக்க திரு அவைக்கு உண்டு என்றால், அதனை எவரும் மறுப்பதற்கில்லை.

ஆனால் சமகால உலகத் தலைவர்கள் சிலரின் சார்வதேச சட்ட விதிகளை மீறிய நடவடிக்கைகளும், புவிசார் அரசியல் போக்குகளை மாத்திரமே மையமாகக் கொண்டு தமது நோக்கத்தை நிறைவேற்றி வரும் தந்திரோபாயம், கத்தோலிக்க திரு அவையை அமைதிகாக்கச் செய்துள்ளது.

'உலக அமைதி' **(Peace)** - 'உலக சமாதானம்' *(Peace-Building/Reconciliation)* என்ற இந்த இரண்டு விடயங்களிலும் இனம் மதம் என்ற அடையாளங்களையும் கடந்து அன்று முதல் இயங்கி வரும் கத்தோலிக்க திரு அவை, இவ்வாண்டு திருத்தந்தை லியோவின் அழைப்பை ஏற்று உலக அமைதிக்காக உழைக்க அழைப்பு விடுக்கின்றது.

குறிப்பாக, இந்த ஆண்டை சமூகத் தொடர்பாடல் *(Social Communication)* ஆண்டு என யாழ் மறை மாவட்டம் பிரகடனப்படுத்தியுள்ளமை ஊடக அறநெறிகளைத் தெரிந்து தெளிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். எம் நாட்டின் தேசிய ஒற்றுமைக்கும் வழி சமைக்க வேண்டும்.

சமூகத் தொடர்பாடல் என்பது, மற்றவர்களுடன் உரையாடி உறவுகளை வளர்த்து, தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு செயல்முறையாகும். இது இனம் - மதம் என்பதைக் கடந்து ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளவும், உணர்வுகளை வெளிப்படுத்தவும், சமூக விதிகளைப் பின்பற்றவும் உதவுகிறது. இது அன்றாட வாழ்வின் பல அம்சங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இங்கு தான் மக்களின் வாழ்வியல் சிந்தனைக்கு வலுச் சேரக்கக் கூடிய முறைமைகள், பொருத்தமான தலைவர்களின் உருவாக்கத்துக்கான வழிவகைகள் மற்றும் அநீதிக்கு எதிரான - ஒடுக்கு முறைகளுக்கு எதிரான பலமான கருத்துருவாக்கம் உருவாகும் என்ற நம்பிக்கை எழுகின்றது.

இயேசுவின் காலத்து செயற்பாடுகள் சமூகத் தொடர்பாடல் ஊடான சமூக மாற்றங்களுக்கும் காலத்துக்கு ஏற்ற சிந்தனைகளுக்கும் வழி வகுத்திருந்தன.

இப் பின்புலத்துடன், யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க திரு அவையின் இந்த ஆண்டுக்கான செயற்திட்டங்களும், தமிழ் மக்கள் மத்தியில் இனம் மதம் என்ற பேதங்களைக் கடந்து, பொருத்தமான சமூக மாற்றத்துக்குரிய வகையில் அமைந்துள்ளன.

சமூகத் தொடர்பாடல் என்பதைப் பிரதானப் படுத்திய பணிகள் என்பது, ஈழத்தமிழ் மக்களாக ஒன்றிணைந்து ஒரு புள்ளியில் நின்று சிந்திக்கக் கூடிய புரிதல்கள் - விடுதலை இறையியல் பார்வையில் தற்கால சூழலுக்கு ஏற்ப கொண்டு செல்லுதல் என்ற முறைமையுடன் உள்ள அடங்கியுள்ளது.

இந்த உள்ளடக்கத்தின் விரிவாக்கம் என்பது, இறை மக்களின் பங்கேற்பு என்பதை குறித்து நிற்கிறது. அதாவது, இறை மக்களிடம் இருந்துதான் செயற்திறன்கள் உருவாக வேண்டும் என்பதும், அதற்கு குருக்கள், துறவிகள் வழிகாட்டியாக இயங்குவார்கள் என்பதும் பிரதான அம்சமாகும்.

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# அயலான் மீது நாம் காட்டும் அன்பே, கடவுள் மீது நாம் கொண்டுள்ள அன்பு



எதிர்வரும் பெப்ரவரி 11ம் ஆதிக கொண்டாடப்படவுள்ள 34 ஆவது உலக நோயாளர் தினத்தை முன்னிட்டு, திருத்தந்தை 14ம் லியோ தனது அதிகாரபூர்வ செய்தியை வெளியிட்டுள்ளார்.

"சமாரியனின் இரக்கம், பிறருடைய துன்பத்தைச் சுமப்பதன் மூலம் அன்பு செய்தல்" என்பதே இந்த ஆண்டின் கருப் பொருளாகும்.

விவிலியத்தில் கூறப்பட்டுள்ள "நல்ல சமாரியன்" கதையைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, இன்றைய அவசரமான மற்றும் அலட்சியம் நிறைந்த கலாசாரத்தில், துன்பப் படுபவர்களுக்காகச் சற்று நின்று உதவுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

நோயாளிகளைப் பராமரிப்பது என்பது வெறும் தனிமனித கடமையல்ல. மாறாக, அது திருஅவையின் ஒரு முக்கியமான சமூகப்பணி என்று அவர் குறிப்பிட்டுள்ளார். "அயலான் மீது நாம் காட்டும் அன்பே, கடவுள் மீது நாம் கொண்டுள்ள அன்பிற்கு உண்மையான சான்று" என்று கூறிய அவர், பெரு நாட்டில் தான் ஆயராக இருந்தபோது கண்ட தன்னார்வலர்களின் தியாகத்தைப் பாராட்டியுள்ளார்.

இந்த ஆண்டு உலக நோயாளர் தின முக்கிய நிகழ்வுகள் பெரு நாட்டின் சிக்லாயோ நகரில் நடைபெறவுள்ளன. நோயாளிகளுக்கு நெருக்கமாகவும், ஆறுதலாகவும் இருப்பதே ஒரு கிறித்தவரின் உயரிய பண்பு எனத் திருத்தந்தைதனதுசெய்தியில்நினைவூட்டியுள்ளார்.

# "கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழுங்கள்"

## - பொதுநிலையினருக்கு கர்தினால் பிலிப் நேரி அழைப்பு

கத்தோலிக்கப் பொதுநிலையினர் தங்கள் திருமுழுக்கு அடையாளத்தைக் கண்டறிந்து உலகிற்கு நற்செய்தியின் சாட்சிகளாக வாழவேண்டும் என்று கர்தினால் பிலிப் நேரி ஃபெர்ராவ் அழைப்பு விடுத்துள்ளார்.

ரச்சோல் அருட்பணியாளர் பயிற்சியகத்தில் நடைபெற்ற பொதுநிலையினருக்கான இறையியல் மற்றும் அருட்பணி படிப்பு நிறைவு விழாவில் அவர் இதனை வலியுறுத்தினார்.

"அழைக்கப்பட்டோம், அர்ப்பணிக்கப்பட்டோம். சாட்சிகளாக அனுப்பப்பட்டோம்" என்ற கருப்பொருளில் உரையாற்றிய அவர், "கடவுளின் அழைப்பு ஒரு சிலருக்கு மட்டுமேயான சலுகையல்ல. அது அனைவருக்கும் ஒப்படைக்கப்பட்ட பணி" என்றார். வலிமையற்றவர்களைக் கடவுள் தேர்ந்தெடுத்து, தனது அருளால் அவர்களை ஆற்றல்படுத்துகிறார் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

திருத்தந்தை பிரான்சிஸின் "நற்செய்தியின் மகிழ்ச்சி" Evangelii Gaudium) திருமுகத்தைக் குறிப்பிட்டுப் பேசிய கர்தினால், கிறிஸ்துவுடனான தனிப்பட்ட சந்திப்பே ஒருவரின் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தும் என்றார். "நீங்கள் மண்ணிற்கு உப்பாக இருக்கிறீர்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவுபடுத்திய அவர், கிறித்தவ நம்பிக்கை தனிப்பட்ட வாழ்வையும் சமூகத்தையும் மாற்றியமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

கடந்த 13 ம் திகதி நடைபெற்ற இப்பயிற்சியில் 142 பேர் பங்கேற்றனர். விழாவின் இறுதியில், அருட்பணியாளர் உயர்பயிற்சியகத்தின் ஆண்டு இதழான 'LUCEAS'-I கர்தினால் வெளியிட்டார். பயிற்சியகத்தின் தலைவர் அருட்பணி. டோனாடோ ரோட்ரிக்ஸ் மற்றும் ஒருங்கிணைப்பாளர் அருட்பணி. ஆஷ்லே அல் போன்சோ ஆகியோர் நிகழ்வை வழிநடத்தினர்.



# புஸ்லாவெளி புனித செபஸ்தியார் திருவிழாத் திருப்பலி நிகழ்வுகள்






*(சென்ற இதழ் (25.12.2025) தொடர்ச்சி)*

***சென்ற ஆண்டிற்கும் (2025) மலர்ந்த இப் புதிய ஆண்டிற்கும் (2026) திட்டமிடாமல் ஓர் இணைப்பாக இக்கட்டுரை அமைகின்றது.***

**தகவல் தொழில் நுட்பம்**

யாழ். மறைமாவட்டம் இவ் வாண்டை சமூகத் தொடர்பு ஆண்டாக முன்மொழிந்துள்ளது. சந்தர்ப்ப சூழல் வழிவிட்டால் இந்த முன்மொழிவை வழி மொழிந்து பின்னர் எழுதுவோம். இப்பொழுது எனது கட்டுரையைத் தொடருக்கு வருவோம். தகவல் தொழில் நுட்பம் இன்று ஓர் எல்லையைத் தொட்டுவிட்டது என்பதில் இரு கருத்துக்கள் இல்லையென்று துணியலாம். இதில் நன்மையும் உண்டு. தின்மையும் உண்டு. ஒரு மேலெழுந்த வாரியான மதிப்பீடு செய்தால், நன்மைளை விடத் தின்மைகளே அதிகம் என்று கூறலாம்.

தேவையற்ற தகவல்கள், சுய விளம்பரத் தகவல்கள் கேடுகெட்ட தகவல்கள், பாலியலைக் கொச்சைப்படுத்தும் தகவல்கள், மனித மனங்களை மாசுபடுத்து கின்றன. மனித நடத்தையை தகவறான பாதையில் எடுத்துச் செல்கின்றன.
வன்செயலைத் தூண்டுகின்றன. இவை பரவலாக்கப்படுகின்றன.

Junk food - அதாவது "குப்பை உணவு" நாவுக்குச் சுவை. உடலுக்கு நஞ்சு. ஆனால் அதுான் இளசுகளின் நாகரிகமாக்கப்படுகின்றது. அதேபோன்றுதான் ***Junk food mind*** குப்பைத் தகவல்கள்.
சிற்றின்பத்தைத் தரலாம். ஆனால் பேரின்பப் பாதையை மூடிவிடுகிறது.

சமயங்கள் கூட, இன்று ஆரோக் கியமற்ற அர்த்தமற்ற பக்திகளையும், பரவசமூட்டும் செபங்களையம், வழிபாடு களையும் வளர்க்கின்றன. மக்களை மதங்கள் ஒரு மாயையில் வளர்க்கின்றன. சமயங்களிலேயே ஓர் உலகப் போக்கு
நிலவுகின்றது.

வங்கிகளில் பணம் திவாலாகி விட்டதை bankruptcy என்று சொல்வார்கள். இன்று சமயங்களில் ஆன்மீகம் திவாலாகிவிட்டது. ஓர் ஆன்மீக வறுமை தோன்றுகின்றது. சமயம் சமயத்திற்கென மாறிவிட்டது. வழியே முடிவாகி விட்டது.

இந்தப் பின்புலத்தில், அதாவது மனித அழிவை நோக்கிச் செல்லும் மனித இனத்தை அழிவில் இருந்து மீட்க - "அனைத்தையும் புதியதாக்க வேண்டிய" அவசியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அந்தத் தன்னுணர்வும் தன்னறிவும் மாற்றத்திற்கு அவசியம்.

**மாற்று முறை**

நற்செய்தியை நாற்திசையும் எடுத்துச் செல்லுங்கள் என்று இயேசு சொன்னார். அன்று தொட்டு இன்றுவரை பலர் அதை எடுத்துச் சென்றார்கள். உண்மை. காலப்போக்கில், நற்செய்தியை வார்த்தையில் எடுத்தியம்பினார்கள். அது வாழ்க்கையைத் தொடவில்லை. எழுத்தியம்பியவர் பலர் தாம் எடுத்தியம்பியதை வாழவில்லை. அது ஏட்டுச் சுரக்காயானது. அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கின்றோம்.

இன்று, அதே நற்செய்தியை, மக்களை விடுதலையாக்கும் நற்செய்தியை மாற்று முறையில் எடுத்தியம்ப வேண்டிய ஒரு தேவை உண்டு.
**A New Way of Evangelization.**
நற்செய்தியை அறிவிக்கும் ஒரு புதிய வழி காண வேண்டும். இந்தப் புதிய வழிதான் அனைத்தையும் புதியதாக்கும் என்று நான் சிந்திக்கின்றேன்.

**உடன் பிறப்பிப்பவர்**

உண்மையைச் சொல்ல வேண்டுமானால் புதிதாக ஒன்று உருவாக, மலரத் துடிக்கின்றது. அதற்கு விழிப்புணர்வு கொண்டு ( **self - awarence)** அந்தப் படைப்புச் செயல் முறையுடன் பங்காளிகளாக, உடன் படைப்பாளிகளாக **(Co -creators)** நாம் அழைக்கப்படுகின்றோம்.

பிரபஞ்சத்துப் பிறப்பவராக **(Cosmic birther)** என்று முன்னறிவேன். அந்தப் பிரபஞ்சத்தின் முக்கிய பங்காளிகளாக நாம் அந்தப் பிறப்பிப்பவரோடு இணைந்து பிறப்பிப்பவர்களாக மாறவேண்டும். அனைத்தையும் புதியதாக்குவோம்.

இயேசு பிறந்தார் என்று அவரைப் பாலகனாக்கி, "ஆராரோ ஆரிவரோ"என்று பின் நோக்கிப் பார்த்துத் தாலாட்டுப் பாடுவதல்ல கிறிஸ்மஸ், மாறாக எம்மில் கிறீத்துவை அனுபவித்து அந்த அனுபவத்துடன் "அனைத்தையும் புதியதாக்கும்"ஒரு பாரிய பணியில் உடன்பிறப்பிப்பவராக மாறுவதுதான் கிறிஸ்மஸ். கிறிஸ்மஸ் ஒரு நாளல்ல. அது ஒரு அனுவமாக மாறவேண்டும். அது, எப்பொழுதும் நடக்கலாம். நடக்கும் நேரமே கிறிஸ்மஸ்

**மனதைப் பயிற்றுவித்தல்**

மனிதரின் மனத்தைக் குரங்கு மனமென்று பௌத்தத்தில் சொல்லியுள்ளது. (அதனால்தானோ குரங்கில் இருந்து பிறந்தவர் மனிதர் என்று சிலர் கேட்கிறார்கள்! நானல்ல!) **Brain Plasticity** என்றொரு சொற்றொடரை நரம்பியல் நிபுணர்கள் கூறுவார்கள்.

மூளை நியூரொன்சின் ஒரு நிலையான தொகுப்பல்ல. அது, நெகிழ்வுத் தன்மையுடையது. அது, சுருங்கலாம், விரியலாம். மூளை தொடர்ச்சியாகத் தனக்குத் தானே பிறக்கின்றது. புதிய உயிரணுக்களை உருவாக்கக்கூடிய தன்மை உடையது, மூளை. சூழலாலும், மரபணுக்கலாலும் மூளை பாதிக்கப்படலாம். அதிகளவான உள நெருக்கீடுகள் புதிய உயிரணுக்களைக் குறைக்கலாம் அதேவேளை உருநெருக்கீடைக் குணப்படுத்தலாம்.

ஆழ்மௌனத் தியான வழிநின்று, மனதை வெறுமையாக்கும் ஒரு கட்டுப்பாட்டு பயிற்சியின் மூலம் மனதை அமைதிப்படுத்தலாம் என்பது ஞானிகளின் அனுபவக் கூற்று. ஆழ்மௌனத் தியானத்தில் ஈடுபட்ட பலரை தியான நேரத்தில் விஞ்ஞான வழி நின்று மூளையை ஆய்வு செய்தவர்கள் சொல்லியது. ஆழ்மௌனத் தியானம் மூளையில் மாற்றங்களைக் கொண்டு வருகின்றது. ஞானிகளின் அனுபவத்தை இன்றைய விஞ்ஞான ஆய்வு உறுதி செய்துள்ளது. அனைத்தையும் புதியதாக்குவதற்கு ஆழ்மௌனத் தியானம் ஒரு சிறந்த வழி என்பது எனது உறுதியான கருத்து.

என்னை நான் வெறுமையாக்கும் பொழுது அந்த வெறுமை ஒன்றுமில்லா மையல்ல. மாறாக வெறுமையில் ஒரு நிறைவு. அந்த நிறைவு ஒரு முழுமை. கடவுள் முழுமையானவர். அந்த முழுமை என்னில் உண்டு. ஆனால் மறைந்துள்ளது. மறைத்துள்ளேன்.

மறைப்பவற்றை நீக்கும் பொழுது முழுமை பிரகாசிக்கும். நீ உலகின் ஒளியாவாய். எனது ஒளி வேறு கடவுள் வேறல்ல. கடவுளில் நான். இதுதான் கிறிஸ்மஸ். கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாடிய நாம் இதையிட்டுச் சிந்தித்தோமா? கடவுளில் நான் என்ற அனுபவம் கிறிஸ்மஸ் அன்று தான் நடைபெறுவதல்ல. அன்னைய தினம் அப்படிப்பட்ட அனுபவம் நடைபெறாமலும் போகலாம். ஆனால் அந்த அனுபவம் எப்பொழுதும் எங்கும் நடைபெறலாம். அதுதான் கிறிஸ்மஸ்

**ஒரு சவால்**

நான் குருத்துவக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில், ஒரு வருடாந்த தியான வேளை ஒரு குருவானவர் மறை உரைகளுக்காக அழைக்கப்பட்டிருந்தார். அவர் இரட்சகர் துறவற சபையைச் சார்ந்தவர். மனதுங்க என்ற பெயர் ஞாபகம்! அந்த வாரம் பூராக அவர் ஆங்கிலத்தில் சொல்லிய வசனம் "Put on the mind of Christ". அந்த நேரம் எனக்கு கேட்டது, " Put on Christ".

எனக்குள் நான் பல தடவை கேட்டுக்கொண்டேன் இது எப்படி சாத்தியமாகும்? கிறீத்துவை நான் எப்படி என் மேல் போடுவது? சேட்டைப் போடுவது போலப் போடவா? அல்லது குருக்களின் உடை - முழு நீளச் சட்டையை (இந்தச் சட்டை எனக்குப் பிடிப்பல்ல) போடுவதா? குழம்பினேன். மறை உரைகளில் அக்குரவர் என்ன சொன்னார் என்று ஞாபகம் இல்லை! மறதியல்ல. புரியாமை!

இப்பொழுது அதேவசனத்தை ஆங்கிலத்திலும் தமிழிலும் படித்தேன். தமிழ் மொழிபெயர்ப்பில் ஒரு தெளிவு தோன்றியது "கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களில் இருக்கட்டும்"; மலர்ந்த 2026 ம் ஆண்டிற்குரிய சவால், இது. அழைப்பும் இது.

**மனநிலை**

கிறீத்துவின் மனநிலை என்ன? ஒரு புதிய உணர்வு நிலையில் ( **level of consciousness**), விரிந்த மனிதில், அயலவரில் கடவுள் என்ற உணர்வில், முழுமைக்கு நாம் சொந்தமென்ற உறவில் வாழ்வது. That's a mouthful! நிறைய விடயங்களை மிகவும் சுருக்கமாகச் சொல்லி விட்டேன்.

**வனாந்தர அனுபவம்**

ஆன்மிகம் பேசும் பொழுது சிலர் வனாந்தர அனுபவத்தைப் பற்றிப் பேசுவர்கள். வனாந்தரம் செய்வது உலகை விட்டு ஓடவல்ல. அயலவர்களிடமிருந்து தப்புவதற்கல்ல. மாறாகத் தன்னை அறிய, அயலவரைக் காண, தன்னிலும் அயலவரிலும் ஆண்டவனைக் காண்பதற்கு. இயேசு வனாந்தரத்திற்கு அழைக்கப்பட்டார். திருமுழுக்கு யோவான் பாலைவனத்திலேயே வாழ்ந்தார். சித்தாத்த அரண்மையை விட்டு வெளியேறி தன்னுள் ஒரு வனாந்தரத்தை உருவாக்கிக் கொண்டார். இவர்கள் கடும் நோன்பிருந்தார்கள். இந்த மூவரும் ஞானிகளானார்கள். வனாந்தர அனுபவம் மனங்களை விரிவாக்கும். ஆழ்மௌனம் மனங்களை விரிவாக்கும். இரண்டும் இணைந்து ஒரு பற்றற்ற வாழ்வை உருவாக்கும்.

**விரிந்த மனம் (Spacious Mind)**

விரிந்த மனம் முழுமையின் ஒரு பகுதியாக என்னைப் பார்க்கும். இவ்வுலகம் ஒன்றிணைந்தது. ஒன்றோடு ஒன்று தங்கியுள்ளது (Interdependent) என்று பார்க்கும் நான் நானாகி என்னில் நான் என்ற ஒரு நிலையில் வாழ்வேன் (Solitude), Aloneness அதாவது "அனைத்தும் என்னில்" என்ற உணர்வு (கிருஷ்ண மூர்த்தி).

**குறுகிய மனம் (Narrow Mind)**

குறுகிய மனம், உலகில் இருந்து என்னைப் பிரித்துப் பார்க்குமயலவரில் இருந்து என்னைப் புறம்பாக்கிப் பார்க்கும். சூழலில் இருந்து என்னை வேறாக்கிப் பார்க்கும். இது, கிரு கினைப்பாடு **(dualism)**. எனது வெற்றி இன்னொருவரின் தோல்வியில் உண்டு என்று சிந்திக்கும். இந்தச் சிந்தனை, இந்தப் பார்வை மற்றவர்களை எனது எதிரிகளாக்கும். அடிப்படையில் ஒரு பயத்தை வெளிப்படுத்தும். அனைத்து உணர்வுகளுக்கும் அடிப்படை உணர்வாக இருப்பது பயம் என்பது உளவளக்கூற்று. பயத்தின் வெளிப்பாடு தான் கோபம்.

**அந்நியன்**

அயலவர் யாரென்று இயேசுவைக் கேட்ட சட்டத்தரணிக்கு இயேசு ஓர் உவமையில் பதில் சொன்னார். அதுதான் நல்ல சமாரித்தனின் உவமை (லூக் 10:29-37) யூதர்களால் ஒதுக்கப்பட்ட, விலக்கி வைக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, தீண்டாமைக்குரிய

**கரவையூர்ச் செல்வம்**

சமாரித்தனை இயேசு தூக்கி வைத்தார். ஆபத்தில் உதவியவன் யூதனல்ல, குருகுலத்தவனல்ல. ஒரு சமாரித்தன். இந்தப் பிரபஞ்சத்தில் பரிணமித்த அனைவரும் அயலவர்கள்தான். அந்நியன் என்று யாருமில்லை. இதுதான் இயேசுவின் மனநிலை.

மறைந்த கத்தோலிக்க அவையின் மாபெரும் சீர்திருத்தவாதி போப் பிரான்சிஸ் இயேசுவின் மனநிலையைக் கொண்டவர். அனைவரையும் உள்வாங்க வேண்டுமென்று ( Inclusivity) அடிக்கடி சொன்னார். அவரது கனவு "நம்பிக்கையின் மக்களாக, எதிர் நோக்கில் அனைவரும் ஒன்றாகப் பயணிப் போம்" என்று உலக மக்களை அழைத்தார். இதுதான் இயேசுவின் மனநிலை.

**முக்கோண அன்பு**

அன்பை முக்கோணத்தில் பார்த்த இயேசு தந்த ஒரே கட்டளை அன்பு எவ்வகையான அன்பு? முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் அன்பு கூர்வாயாக. அதாவது இரு கினைப்பாடற்ற அன்பு. நிபந்தனையற்ற அன்பு. முழுமையான அன்பு. முழுமைக்கு அழைப்பு.

முழுமை என்னில் உண்டு. முழுமையில் இருந்து பரிணமித்தேன். ஆனால் வளர்ப்பில், சூழலால் உளவளச் சூழலால் சேறுகளும், முகமூடிகளும், என்னை மூடிவிட, நான் அகத்தே பிளவுபட்டேன். இந்தப் பிளவுதான் இருகிளைப்பாட்டின் அடித்தளம். இந்தப் பிளவை நீக்கிய பிணைப்பை உருவாக்குவதுதான் மனித ஆன்மிகம். பயணம் - **from duality to non - duality** இரு கினைப்பாட்டிருந்து ஓர்மை உணர்விற்குப் பயணிப்பது ஆன்மிகம். அங்கு கிறீத்துவைச் சந்திப்பேன். கிறீத்துவின் மன நிலையில் வாழ்வேன். கிறீத்துவில் வாழ்வேன்.

இப்புதுவாழ்விற்கு என்னையும் நானே அழைத்து, காவலன் வாசகர்களாகிய உங்களையும் அழைக்கின்றேன். அனைத்தையும் பதியதாக்குவோம் முற்றும்.



# தமிழினம் பொங்கட்டும்

# தமிழரின் பானையும் பொங்கட்டும்!

பூமிப்பந்தில் பூச்சரம் சுற்றியதுபோல், படர்ந்து கிடக்கும் தமிழரெல்லாம் ஒற்றைப்புள்ளியில் ஒன்றிணைந்து கொண்டாடும் உறவுத் திருவிழா தைப்பொங்கல். சார்ந்திருக்கும் சமயம், சேர்ந்திருக்கும் சமூகம் மற்றும் வாழ்ந்துவரும் வட்டாரம் எனும் வரையறைகளைக் கடந்து, தமிழ் எனும் தனிப்பெரும் அடையாளத்தால் தொப்புள் கொடி உறவில் இதயம் பொங்கி மகிழ்ந்திருக்கும் மங்கலத் திருவிழா பொங்கல் என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை. மறதிக்குப் பெயர்பெற்ற தமிழினம். மறவாமல் கொண்டிருக்கும் உயர் பண்பு நன்றிமறவாமை. தன்னை வாழவைக்கும் இயற்கைக்கும், இணைந்து இயங்கும் விலங்குகளுக்கும் நன்றிகூறும் தருணமாகப் பொங்கல் பண்டிகையைத் தமிழினம் தகவமைத்துக் கொண்டுள்ளது.

அறுவடை முடிந்த கையோடு அதற்குக் காரணமானவர்களை நன்றியோடு நினைவுகூரும் நற்பண்பின் செயல்வடிவமாக, பொங்கல் விழா குதூகலத்தோடு கொண்டாடப்படுகிறது. போகியிலே பழையனவற்றைக் களைந்து, செங்கரும்பும் இளமஞ்சளும் கைகோர்த்து, பச்சரிசியுடன் சர்க்கரை கலந்து, சூரியன் முன்னிலையில் நெருப்புச் சுவாலைகளின் அனல் கரங்களால் புதுப்பானையில் பொங்கி வழிய பொங்கலிட்டு, மறுநாள் கால்நடைகளைக் குளிப்பாட்டி கொம்புகளில் மைதீட்டி அலங்கரித்து, கழுத்தில் பூச்சூடி அவைகளையும் தன் இணைப்பணியாளர்களாய் கௌரவித்து, நிறைவாக மானிட முகங்களைத் தரிசித்து, நலம் விசாரித்து, உறவுகளைப் பகிர்ந்திட முகத்திற்கு முகமாய் காணும் திருநாளாய் பொங்கல் விழா நான்கு நாள்களாய் நடைபெறுகிறது.

வருடந்தோறும் தமிழர் வாழ்வில் விளக்கேற்ற வந்துபோகும் வசந்த விழாவான பொங்கலையும், அதன் பொருளையும் நடந்து வந்த வரலாற்று வழிகளை இளைய தலைமுறைக்கு விளக்கிக் கூறுவதைத் தமிழினம் தவிர்த்தே வருகிறது. விடுமுறை கிடைக்கிறது என்கிற மேலிடும் மகிழ்ச்சியோடு தமிழரின் மரபுவிழா குறிக்கப்பட்டு வருகிறது, வான் புகழ் கொண்ட தமிழரின் வரலாற்றுக் கொண்டாட்டத்தை இன்றைய தலைமுறை பள்ளிக்கு விடுமுறை, புத்தாடைகள், தொலைக்காட்சியில் புதிய திரைப்படம், சுவையான சமையல், வெளியூர் சுற்றுலா என்கிற சுழற்சிக்குள்ளே சுருண்டுவிடுகிறது. வேர்களை விலக்கிவிட்டு, கிளைகளில் மட்டுமே தோரணம் கட்டித் தொங்கவிடுகிற இளைய தலைமுறையினர் பொங்கலின் பொருளினை உணர்ந்து பானையில் பொங்கலிட வேண்டும் அங்ஙனமே பொருளுணர்ந்த தமிழினம் பொங்கி எழுந்திட வேண்டும்.

“கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி தமிழர் குடி“ எனும் உன்னதத்தைக் கொண்ட தமிழினம், வெறும் பழம் பெருமை பேசிப் பேசியே பாழாய் போய்க் கொண்டிருக்கிறது. தமிழினம் திட்டமிட்டு அதிகார வர்க்கத் தால் வஞ்சிக்கப்படுகிறது. தமிழின விரோதிகளும் துரோகிகளும் தமிழருக்குப் பாடை கட்டுவதிலே திரைமறைவு வேலைகளைத் திறம் படச் செய்து வருகிறார்கள். வேர்களை விலக்கிவிட்டு மரங்கள் தங்கள் கிளைகளுக்குத் தோரணம் கட்டுவதால் வாழ்ந்து விட முடியாது, வேரில் வெந்நீரைப் பாய்ச்சு வதும்,கிளைகளுக்கு வர்ணம் பூசுவதுமாய் சில தமிழினப் பகைவர்கள் தமிழின கற்பக விருட்சத்தை அழித்து விட ஆலாபனை செய்து வருகிற அபாயத்தை, தமிழ்த் தலைமுறைகள் அறியாமலே அழிந்து வருகின்றன. இந்நிலையில், விழாவோடு முடித்துக்கொள் ளாமல் தமிழும் தமிழரும் விழாமல் பார்த்துக்கொள்வது தமிழ் மறவர்களின் தற்காலக் கடமையாகும்.

தனக்கெனத் தன்னிகரற்றத் தன்மைகளைக் கொண்டு தனித்தியங்கும் உயர்தனிச் செம்மொழி எனும் உன்னதத்தைக் கொண்ட தமிழின் ஆண்டுகளுக்குச் சமஸ்கிருதத்திலே பெயர்கள் சூட்டி கேவலப்படுத்தும் பழக்கம் வேறு எந்த மொழிகளிலும் இருக்கமுடியாது, அதுவும் புராணங்களின் புனைவுகளிலிருந்து பிழிந்தெடுத்த கற்பனைக் கதைகளிலிருந்து இந்த விச வேர் முளைக்கிறது. நாரதமுனிக்கும் பெண் வேடம் பூண்டிருந்த கண்ணனுக்கும் பிறந்த பிள்ளைகள் அறுபது பேராம்! அவர்களின் பெயர்கள் தமிழரின் ஆண்டுகளுக்குச் சூட்டப்பட்டிருக்கின்றன. சீரிளமைத் திறம் வியக்கும் அன்னைத் தமிழை ஆரிய அழுக்கு பற்றிக் கொண்டதால் தமிழரின் ஆண்டுக்கு அந்நியர்களின் புராணப் புனுகுகளைக் கடளாக வாங்கி வைத்திருக்கும் இழிவை இந்த இளைய தலைமுறை அறிந்திருக்கவேண்டும். தான் பெற்றெடுத்த குழந்தைக்கு வழிப்போக்கன் பெயர் சூட்டுவதும் அதுவும் அடுத்த வீட்டுக்காரனைத் தகப்பனாக முதலெழுத்தில் குறிப்பதும் எத்தகைய அவமானம் என்று மானத்தை உயிரினும் மேலாய் போற்றுகிற தமிழ்க்குடிகள் உணரவேண்டும்.

“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பது தமிழர் கண்ட வாழ்வியல் நடைமுறை. மரபுகளையும் பண் டையத் தமிழர் இலக்கியத் தரவுகளையும் கொண்டு ஆராய்ந்தால் தமிழராண்டின் தலைமாதம் தை என்பது புலனாகும். தமிழ் மாமேதைகள் மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார். தமிழ்த் தென்றல் திரு.வி.க. மற்றும் பாவேந்தர் பாரதிதாசன் உள்ளிட்ட தமிழின அறிஞர்கள் இதனை அறுதியிட்டு உறுதி செய்திருக்கின்றனர்.

தமிழரையும் ஈழத்தையும் வஞ்சிப்பதையே நோக்கமாகக் கொண்டு அரசுகள் இயங்குவதை வரலாற்றில் பார்த்து வருகிறோம். தமிழரின் வீர விளையாட்டாகவும் காளை இனத்தின் வீரியத்தை வலுப்படுத்தவும் நெடுங்காலமாய் நடத்தப்பட்டு வரும் மஞ்சு விரட்டான ஜல்லிக் கட்டு நிகழ்ச்சியை முடக்க சதிசெய்தனர். தமிழினத்தின் ஒருமித்த தன்னெழுச்சிப் போராட்டமாகிய மெரினா புரட்சியால் தமிழினப் பகைவர்களின் சதி உடைக்கப்பட்டது. தமிழர் மண்ணில் வாடிவாசல்கள் திறக்கப் பட்டன.

தமிழ்நாட்டின் வளர்ச்சியை வடநாட்டவர்கள் பொதுவாகப் பொறுத்துக்கொள்வதில்லை. இந்திய ஒன்றியம் பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு. இங்கே ஒரே தேசியம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் எனும் போலியான ஒற்றைக் கருத்தியல் நடை முறைக்கு ஒத்துவராது. தமிழரின் தாய்நாடாம் தமிழ்நாட்டிலும் இன்னும் பிற நாடுகளில் தேசிய மொழியாகவும் கொண்டாடப்படுகிற செந்தமிழை முடக்கும் நோக்கில், இந்திய ஒன்றிய மொழிகளில் ஒன்றான இந்தி மொழியை தமிழர்மீது திணிப்பதும், இந்தியை இந்திய ஒன்றியத்தின் ஒரே தேசிய மொழி எனப் பிழையாகப் பிதற்றி, போலியாகக் கட்டமைப்பதை தமிழர்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள்.

வானொலி உள்ளிட்ட ஊடகங்களிலும், தொடர் வண்டி போன்ற போக்குவரத்துகளிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும் தமிழரின் வரிப்பணம் கலந்தே இருக்கிறது. ஆனால், இங்கெல்லாம் தமிழருக்குப் புரியாத அந்நிய மொழியான இந்தியே வலிந்து திணிக்கப்படுகிறது. தமிழர் தமிழரோடு உரையாட தாய்மொழி தமிழும், உலகோடு உரையாட ஆங்கிலமும் இருக்கும்போது இடைச் செருகலாக இந்தி அறியாத தமிழர்கள் மீது இந்தியைத் திணிப்பது மனித உரிமை மீறலாகும்.

தமிழை எங்கெல்லாம் ஒழிக்க முடியுமோ அங்கெல்லாம் ஒழிப்பதற்கு அனைத்து அதிகார ஆயுதங்களையும் களத்தில் இறக்கி விட்டு. மேடைதோறும் இந்திய ஒன்றியத்தின் தலைமை அமைச்சரும், மற்ற வட நாட்டு அமைச்சர்களும் தப்புத்தப் பாய்த் தமிழைப் பேசி தமிழ் ஆர்வலர்களாய் தங்களைக் காட்டிக்கொள்ள முயல்கிறார்கள். கோழியைப் பிடித்து குழம்பு வைக்க முயலுகிறவனும், கோழியின் மொழியிலே அதனைக் கூப்பிடுகிறான் கொலைகாரன்

> **“தப்புத்தப்பாய்த் தமிழைப் பேசி தமிழ் ஆர்வலர்களாய் தங்களைக் காட்டிக்கொள்ள முயல்கிறார்கள். கோழியைப் பிடித்து குழம்பு வைக்க முயலுகிறவனும், கோழியின் மொழியிலே அதனைக் கூப்பிடுகிறான் கொலைகாரன் தனது மொழியைப் பேசுகிறானே என்று கோழி பெருமை பாராட்டிக் கொண்டால், குழம்பில் மிதப்பதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை.”**

**அருட்பணி டேவிட் மைக்கல்**

தனது மொழியைப் பேசுகிறானே என்று கோழி பெருமை பாராட்டிக் கொண்டால், குழம்பில் மிதப்பதைத் தவிர அதற்கு வேறு வழியில்லை.

சங்கம் வைத்து தமிழை வளர்த்த இம்மண்ணில் “காசி தமிழ்ச்சங்கம்“ என்னும் தமிழுக்குத் தொடர்பில்லாத அமைப்பை மக்களின் வரிப்பணத்தில் அமைப்பதும், அதற்கு தமிழுக்கே தொடர்பில்லாதவர்களை வைத்துக் குடமுழுக்கு நடத்துவதும் தமிழுக்கும் தமிழருக்கும் இழைக்கும் அவமானமாகும். செத்துப்போன சமஸ்கிருதத்தைத் தமிழரின் தலையில் கட்டுவதை மானமிகு தமிழன்னையின் பிள்ளைகள் தலையைக் கொடுத்தாவது தடுத்து நிறுத்துவார்கள். கனகவிசயனின் தலையில் கல்லைச் சுமக்க வைத்து. இமய உச்சியில் சிலையெழுப்பிக் கொடியை நட்ட தமிழ் மரபின் தலைமுறைகள் இந்தக் கொடுமைகள் கண்டு கொதிக்காமல் இருப்பது வியப்பாய் இருக்கிறது.

தமிழுக்கு எதிரான எல்லா நடவடிக்கைகளிலும் ஒன்றிய அரசுகள் ஈடுபட்டு வருவது வரலாற்றை அறிந்தவர்கள் புரிந்துகொள்வார்கள். தமிழ்நாட்டின் மக்கள்நலத் திட்டங்களுக்கு முட்டுக்கட்டைகள் போட அனைத்து முயற்சிகளிலும் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருகிறது. ஆனால், இந்திக்கும் இந்துத்துவ அடிப்படைவாதத்திற்கும் முட்டுக் கொடுக் கிறது. தமிழர்களுக்குத் தரவேண்டிய கல்வி நிதியைத் தராமல், புதிய கல்விக் கொள்கை எனும் அறிவியலுக்கு முரணான புராணப் புனைவுகளையும், பகுத் தறிவுக்கு ஒவ்வாத மூடத்தனத்தையும் திணிக் கின்றனர். செயற்கை நுண்ணறிவும், டிஜிட்டல் உபகரணங்களும் அறிவுசார் உலகை வழிநடத்தும் போது புராணங்களையும் கற்பனைக் காப்பியங்களையும் கல்விக் கருவூலமாகப் போதிக்கிறார்கள். பகுத்தறிவுப் பூமியான தமிழ் மண்ணில் மூடத்தனங்களை மூலதனங்களாகக் கொண்டு மக்களிடையே பிற்போக்குத்தனத்தைப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

அமெரிக்காவின் ரைட் சகோதரர்கள் விமானத்தைக் கண்டுபிடித்து உலகிற்குத் தந்தனர் ஆனால், புல்புல் பறவையில் ஆகாயத்தில் மனிதர்கள் பறந்ததாக மக்களின் காதில் பூ சுற்றுவதையும், பொய்களை விதைப்பதையும் முழுநேர வேலையாக வைத்திருக்கிறார்கள். வரலாறுகளைத் திரித்து, கோவில்களை இடித்து, மசூதிகளையும் கிறித்தவ ஆலயங்களையும் அமைத்தார்கள் என்று வதந்தி களைப் பரப்பி அமைதித் தோட்டமான தமிழ் மண்ணில் மதக் கலவரங்களுக்கு வித்திடுகிறார்கள். தமிழ் மண்ணை ஒருகாலமும் ஆளமுடியாது என்பதால், புறவாசல் வழியே அரசியல் முகவர்களை ஆளுநர்களாய் அனுப்பி மக்களாட்சிக்கு விரோதமாய் மன்னராட்சி நடத்துகின்றனர். “பெற்றோரைச் சுற்றிவருவது பூமியைச் சுற்றுவதற்குச் சமம்“ எனப் புரட்சியான வேதம் கூறிய தமிழ்க் கடவுள் முருகனை வைத்து அரசியல் செய்து, அதி காரத்தைப் பிடிக்க குறுக்கு வழியில் தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் கும்பலை, தன்மானம் கொண்ட தமிழினம் அடையாளம் காணவேண்டும். தமிழரின் இரத்தத்தை எண்ணெய் ஆக்கி, அதிலே குன்றத்து தீபம் ஏற்றி மகிழ்வு காணும் மனநிலை கொண்டவர் அல்லர் முருகப்பெருமான். தமிழரின் வாழ்வில் தீபம் ஏற்றுவதைப் பற்றி சிந்தியாமல் மசூதிக்கு அருகில் உள்ள எல்லைக் கல்லில் தீபம் ஏற்றி அரசியல் இலாபம் தேடும் மதவெறிக் கும்பலுக்குத் தமிழர்கள் இரையாகி விடக்கூடாது.

ஆட்சியில் இருந்த பாண்டியன் தவறிழைத்ததால், மதுரையை எரித்த வீரத்தமிழச்சி கண்ணகி மரபில் வந்த தமிழ் வேங்கைகள், கடவுளின் பெயர் சொல்லி தமிழரிடையே பிளவுகளையும் மதவெறிகளையும் ஏற்படுத்தும் விஷமத்தனத்தை வேரோடுப் பிடுங்கி நெருப்பில் வீசவேண்டும். இன்று தமிழ் மக்களைப் பிளவுபடுத்தி, மக்கள் நலத்திட்டங்களைப் பின்னுக்குத்தள்ளி மதவெறியூட்டி அதிகாரப் பசியைத் தீர்த்துக்கொள்ள ஆட்சியாளர்கள் முயல்வதும், அதற்குப் புனிதமிக்க நீதித்துறையில் புகுந்துள்ள மதவெறி ஓநாய்கள் ஒத்தாசை புரிவதையும் தமிழ்மக்கள் வேடிக்கை பார்க்கக்கூடாது. வடவர்களின் சூழ்ச்சி எந்த வடிவில் வந்தாலும், தன்மானம் கொண்ட தமிழ்த்தாயின் பிள்ளைகள் அதனைப் பிடுங்கி எறிய போர்க்குணத்தோடு புறப்பட்டு வர வேண்டும்.

பொங்கலுக்கு முன்னே பழையனவற்றையும் அவசியமற்றதையும் கழிவுகளையும் நெருப்பிலிட்டு எரித்துப் போகி கொண்டாடும் தமிழினம், தமிழருக்கு எதிரான இந்தித் திணிப்பு, இந்துத்துவத் திணிப்பு. புராணங்களைப் புகுத்துதல், அறிவுக்கு எதிரான மூடத்தனங்களைப் பரப்புதல் என்று நீளும் குப்பைகளைப் பகுத்தறிவுத் தீயில் எரித்துவிட்டு பொங்கலிட புறப்பட வேண்டும்.

தமிழினமே! இனியும் நீ பொறுத்தது போதும். பொங்கல் திருநாளில் தமிழரின் பானைகள் பொங்குவதுபோல, ஒட்டுமொத்தத் தமிழினமும் இத்தமிழர் விரோதப் போக்குகளுக்கு எதிராகப் பொங்கி எழவேண்டும்.

**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு!**

**மனத்தில் தொடங்கும்**

**புதுவருடப் பயணம் ஒரு நொடி!**

**ஓர் எண்ணின் மாற்றம்!**

**ஒரு புதிய காலண்டர்!**




# புதிய எண் அன்று புதிய மாற்றம்!

அவ்வளவுதான் நாம் “புது வருடம்“ என்று அழைப்பது. ஆனால், ஓர் எண் மாறுவதால் மட்டும் வாழ்க்கை மாறிவிடுமா? உண்மையில் புதுவருடம் எண்ணத்தில் தொடங்குவதில்லை. அது மாற்றத்தில்தான் தொடங்குகிறது. கடந்த வருடம் நம்மைப் பலவிதமாக மாற்றியிருக்கலாம் சிலருக்கு அது வளர்ச்சியாக, சிலருக்கு அது வலியாக!

இழப்புகள், எதிர்பார்ப்புகள், நிறைவேறாத கனவுகள் இவையெல்லாம் நம்மை உடைக்க அல்ல் நம்மை ஆழப்படுத்தவே! ஆனால், நாம் என்ன செய்கிறோம்? கடந்த வருடத்தின் கசப்புகளை அப்படியே புதிய வருடத்திற்குள் எடுத்து வருகிறோம். பழைய கோபங்கள், பழைய தீர்ப்புகள். பழைய புண்கள்… இவையெல்லாம் புது எண்ணோடு பயணிக்கின்றன. அதனால் தான் புது வருடம் வந்தும் பலருடைய வாழ்க்கை அதேபோலவே இருந்து விடுகின்றன. புதுவருடம் நம்மிடம் பெரிய சாதனைகளை எதிர்பார்ப்பதில்லை. அது ஒரு சிறிய மாற்றத்தை மட்டுமே எதிர்பார்க்கிறது.

திருவிவிலியம் மென்மையாக நமக்குச் சொல்கிறது: ”உங்கள் மனநிலையைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்” (உரோ 12:2). இது ஒரு கட்டளை அன்று: ஓர் அழைப்பு. “இந்த வருடம் நீ சற்றேனும் மாற முயற்சிசெய்” என்று கடவுள் நமக்குக் கூறும் அன்பான குரல். இந்த மாற்றம் பெரியதாக இருக்க வேண்டியதில்லை.

கடுமையாக இருந்த மனம் சற்று கனிவாக மாறினால் போதும் அவசரமாக இருந்த வாழ்வு சற்று அமைதியாக மாறினால் போதும். எப்போதும் குறை கூறிய நாவு சில நேரங்களில் நன்றி சொல்லத் தொடங்கினால் போதும். இதுவே புதிய மாற்றம்!

இன்றைய உலகில் நாம் அதிக வேகமாக வாழ்கிறோம். ஆனால், அதிகமாக மனிதத்தை இழக்கிறோம். போட்டிகள், பதவிகள், பொருளாதார அழுத்தங்கள் இவற்றிற்கிடையில் நம் மனம் மெல்ல கடினமாக மாறிக்கொண்டிருக்கிறது. இந்தக் கடினத் தன்மையை உடைக்கவே புது வருடம் நமக்கு மற்றொரு வாய்ப்பைத் தருகிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவார்: ”உலகம் இன்று அதிகமாகத் தேடுவது வெற்றி பெற்ற மனிதர்களை அன்று. கனிவு கொண்ட மனிதர்களை,” இந்த வருடம் நாம் வெற்றியைச் சேர்க்க முயற்சி செய்வதைவிட, மனிதத்தன்மையைப் பாதுகாக்க முயற்சி செய்வோம்.

ஒரு குடும்பத்தில் அனைவரும் ஒரே வீட்டில் இருக்கலாம் ஆனால், ஒருவருக்கொருவர் நேரம் இல்லாமல் இருக்கலாம். இந்த வருடம் நாம் வீட்டிற்குள் ஒரு சிறிய மாற்றத்தைத் தொடங்கலாம். அவசர மில்லாமல் ஒருவரைக் கேட்பது, கோபத்தை உடனே கூறாமல் மௌனமாக்குவது. ஒரு நாள் முடிவில் நன்றி சொல்ல நேரம் எடுப்பது. இவை சிறிய மாற்றங்கள். ஆனால், வாழ்க்கையை மெதுவாக மாற்றக் கூடியவை.

புதுவருடம் அதிசயம் செய்யாது. ஆனால், மாற்றத்திற்கான விதையை விதைக்கிறது. அந்த விதை வளர வேண்டுமென்றால், நம் முயற்சியும் கடவுளின் அருளும் ஒன்றாகச் சேரவேண்டும், இந்த வருடம் எல்லாமே சரியாக நடக்காமலிருக்கலாம் ஆனால், எதுவாக இருந்தாலும் அதை எதிர்கொள்ளும் நம் மனம் சற்று நல்லதாக மாறட்டும்,

**அருட்பணி.. லா. பிரின்ஸ்**

**எண் மாறிவிட்டது. இப்போது மாற்றம் தொடங்க வேண்டிய இடம் நம் உள்ளம், அதுவே, இந்த புதுவருடத்தின் உண்மையான அர்த்தம்.**

**‘எண் மாறும் போது**
**வாழ்க்கை மாறாது:**
**உள்ளம் மாறும் போது**
**நாள் வருடம் புதிதாகிறது.’**

# திருத்தூதுச் சீடர்களுக்கான உருவாக்கம்



**அருள் முனைவர் எஸ். அல்போன்ஸ்**

தம் சீடர்களின் உருவாக்கத்தில் இயேசு செலவிட்ட நேரம், திரு அவையின் உருவாக்கப் பணியின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. அவர் கையாண்ட உருவாக்க முறையே அதற்கு மாதிரியாகவும் திகழ்கிறது. அவர் கற்றுத்தருவதுடன் நின்றுவிடவில்லை. தம் வாழ்வையே பகிர்ந்து அவர்களுக்கு “மாதிரி“ காட்டினார். எவ்வாறெனில், ”தமது இறைவேண்டலின் மாதிரி வழியாக “இறைவேண்டல் செய்ய எங்களுக்குக் கற்றுத்தாரும்“ என அவர்களைக் கேட்கச் செய்தார். கூட்டத்திற்கு உணவு அளித்த தன் வழியாகத் தேவையில் இருப்போரைக் கவனிக்கக் கற்பித்தார். எருசலேமுக்குப் பயணித்ததன் வழியாக சிலுவையின் பாதையை அவர்களுக்குக் காட்டினார்” (மு.து 14 டி).

இறைமக்கள் அனைவரும் சீடத்துவ உறவு வாழ்வுக்கும், நற்செய்தியின் மகிழ்ச்சிக்கும் சாட்சியம் பகரவும், கூட்டியக்க முறையைச் செயற்படுத்தவும் அழைக்கப்பட்டுள்ளனர். ”கூட்டியக்கம் என்பது அழைத்தலையும், மறைத்தூதுப் பணியையும் பற்றிய ஆழ்ந்த உணர்வு, புதிய முறையில் திருஅவைசார் உறவுகளை வாழ்தல், பங்கேற்பில் புதிய நடை முறை, திரு அவையோடு இணைந்து தெளிதேர்வு செய்யும் செயல்முறை, தொடர் மதிப்பீட்டாய்வு செய்யும் பண்பாடு என்பவற்றை உள்ளடக்கியது ஆகும்” (இஅ 141). உரிய உருவாக்க முறைகள் இன்றி இவை கைகூடாது. மேலும். கூட்டொருங்கியக்கத்திற்கான உருவாக்கத்தைப் பெற்றிருந்தால்தான் திருமுழுக்கில் தாங்கள் பெற்ற கொடைகளை மறைத்தோ பயன்படுத்தப் படாமலோ வைத்திராது, அனைவருடைய நலனுக்காகவும் அவை பயன்படுத்தப்பட வேண்டியவை எனும் உணர்வும் உறுதிப்பாடும் அவர்களுக்கு ஏற்படும்.

## பெறுபவர்களே வழங்குபவர்களும் ஆவர்!

இறைமக்கள் உருவாக்கம் பெறுபவர்கள் மட்டும் அல்லர் முதன்முதலில் அவர்களே கூட்டுப் பொறுப்புடன் அதை வழங்குபவர்களும் ஆவர். ஏனெனில், முதல் உருவாக்கம் குடும்பத்தில்தான் நிகழ்கிறது.

பணியாற்றுபவர்கள் இறைமக்கள் அனைவரின் ஞானத்துடன் இணைத்தே அதை ஆற்றவேண்டும். இதுவே கூட்டொருங்கியக்க முறையில் உருவாக்கம் நிகழ்கிறது என்பதன் முதல் அடையாளம் (முஅ 14உ), ”கூட்டியக்க முறையிலான உருவாக்கம் என்பது தங்கள் குடும்பத்திலும் வேலையிடத்திலும், திருஅவை மற்றும் சமூக, அறிவுசார் தளங்களிலும் இறைமக்களைத் தங்கள் திருமுழுக்கு அழைப்பை முழுமையாக வாழச்செய்யும் நோக்குடையது. அது ஒவ்வொருவரும் தனக்கே உரிய அருங்கொடைகளுக்கும் அழைத்தலுக்கும் ஏற்ப திருஅவையின் மறைத்தூதுப் பணியில் செயலாக்கத்துடன் பங்கேற்கும் வகையில் அவர்களை ஆற்றல்படுத்தும் குறிக்கோளைக் கொண்டது” (முஅ 14க).

இயேசுவில் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் அவருடைய சீடர்கள் அவரது திருத்தூதுப் பணியில் பங்கேற்பவர்கள். அவர்களது சீடத்துவ உருவாக்கம் கிறித்தவப் புகுநிலையில் தொடங்கித் தொடர்கிறது. அவர்கள் ஒவ்வொருவரும் தங்களது நம்பிக்கைப் பயணத்தில் தாங்கள் சந்திப்பவர்கள் இயேசுவுடன் கொள்ளும் உறவில் வளரவும், அவர்களுக்குத் திருஅவையுடன் உள்ள ஒன்றிப்புறவை அறிமுகப்படுத்தவும் உதவுகின்றனர். பெற்றோர், உறவினர், ஞானப்பெற்றோர், வேதியர்கள், ஆசிரியர்கள், திருவழிபாட்டுத் தலைவர்கள். அன்பிரக்கப்பணி ஆற்றுகின்றவர்கள், திருத்தொண்டர்கள், அருட்பணியாளர்கள். ஆயர்கள் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆனால், புகுமுகப் பயணம் முடிந்ததும் குழுமத்துடன் அவர்கள் கொண்டுள்ள உறவு பொதுவாக ஆழத்தையும் வலுவையும் இழக்கிறது. அவர்களது உருவாக்கமும் அதிகம் கண்டுகொள்ளப்படுவதில்லை. “ஆனால், ஆண்டவரின் திருத்தூதுப் பணியாற்றும் சீடராக மாறுதல் என்பது ஒருபோதும் முற்றுப் பெறும் செயல் அல்ல. தொடர் மனமாற்றத்தையும் “கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு“ (எபே 4:13) அன்பில் வளருவதையும் நம்பிக்கையின் உயிர் துடிப்பும் மகிழ்ச்சியும் உள்ள சாட்சியம் பகிர ஆவியார் தரும் கொடைகளுக்கு உள்ளம் திறந்தவர்களாக இருப்பதையும் தொடர்ந்து அது கோருகிறது” (இஅ 142).

கிறிஸ்துவுடன் ஒன்றித்து ஒத்துருவாவதே உருவாக்கத்தின் நிறைவு. நம்பிக்கையாளர்கள் பலருக்கு அவர்கள் திரு அவையுடன் கொண்டுள்ள ஒரே தொடர்பு ஞாயிறு திருப்பலியில் பங்கேற்பது மட்டுமே. அதனால் அது மிக அர்த்தமும் அனுபவமும் தரும் வகைகளில் கொண்டாடப்படவேண்டும். குறிப்பாக, மறையுரையும் அனைவருடைய பங்கேற்பும் சிறப்பாக அமைதல் அவசியம். இதுவே அவர்களது கூட்டியக்கத்தை உறுதிசெய்யும். உருவாக்கத் தளங்களும் முறைகளும் இறைமக்களின் உருவாக்கம் பல்வேறு தளங்களில் நடைபெறுகிறது.

இறையியல் உருவாக்கத்துடன் கூட்டுப்பொறுப்பு, செவிகொடுத்துக் கேட்டல், தெளிதேர்வு செய்தல், கிறித்தவ ஒன்றிப்பு மற்றும் பல்சமய உரையாடல், வறியோருக்கு உதவுதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஊடகங்கள்வழி மறைத் தூதுப்பணி என்பனவற்றை நடத்துவதற்கான தனிப்பட்ட சில திறமை வளர்ப்புப் பயிற்சிகளும் தேவைப் படுகின்றன. சிறாருக்கும் இளையோருக்கும் மறைக் கல்வி உருவாக்கம் தருவதிலும் தனிப்பட்ட கவனம் தேவை.

திருத்தூதுச் சீடர்களுக்கான உருவாக்கம் அறிவு. உணர்ச்சி, உறவு. அருள்வாழ்வு எனும் ஆளுமையின் அனைத்துப் பரிமாணங்களையும் சார்ந்ததும் ஒருங்கிணைந்தும் நடைமுறை அனுபவ முறையிலும் அமைவதாகும். “மாமன்றத்தின் நடைமுறை முழுவதிலும் அழுத்தியுரைக்கப்பட்ட ஒன்று ஆண்களும் பெண்களும் பொதுநிலையினரும் துறவியரும் திருநிலைத் திருப்பணியாளர்களும் அருட்பணி பயிற்சி மாணவர்களும் இணைந்து பங்கேற்கும் பொதுஉருவாக்கம். *(தொடர்ச்சி 6ம் பக்)*

அன்பின் மகிழ்வு

# சமூகத் தொடர்பாடல் ஆண்டு

# இவ்வாண்டில் அர்த்தமுள்ள தொடர்பாடலின் பண்பாட்டை கட்டியெழுப்புவோம்



அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

**முன்னுரை**

நம் குடும்பங்களில் சமூகத்தில் பல காயங்கள் வெறும் வெறுப்பிலிருந்து தொடங்குவதில்லை. மாறாக அக்கறையில்லாமல் உதிரும் ஒரு வாக்கியம், அன்பு பேச வேண்டிய இடத்தில் நிலவும் மௌனம், மனம் கலங்கியபோது அவசரமாக அனுப்பப்படும் ஒரு குறுஞ்செய்தி, இவையே பல உறவுகளை மெதுவாகச் சிதைக்கத் தொடங்குகின்றன. பெரும்பாலும் நாம் அதை “சிறியது” என்று நினைத்துக்கொள்வோம். ஆனால் உறவுகளின் உடைவுகள் பல நேரங்களில் பெரும் சண்டைகளால் நடைபெறுவது அல்ல, சிறிய சிறிய சொற்களால், சிறிய சிறிய தவறான புரிதல்களால் தான் குலைந்துவிடுகின்றன. ஒரு குடும்பத்தில் அமைதி குலையச் செய்ய பெரிய காரணம் தேவையில்லை. “சரி” என்று எழுதப்பட்ட ஒரு குறுஞ்செய்தி கூட தவறாகப் புரிந்து கொள்ளப்படலாம். ஒரு முகபாவனை, ஒரு பரிகாரச் சிரிப்பு, அல்லது “பரவாயில்லை” என்று சொல்லி விட்டு மனத்தில் வைத்திருக்கும் வலி, என்பன பெரும் ஆழ்மனத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. கோபத்தில் பேசப்படும் ஒரு வார்த்தை, ஒரே நிமிடத்தில் வெளியே வந்தாலும், அதை மறக்க ஒருவருக்கு ஆண்டுகள் கூட தேவைப் படலாம்.

இன்றைய காலத்தில் நமது தொடர்பாடல் வேகம் அதிகரித்துச் செல்கையில் இதனால் மேலும் தீவிரமாகிறது. காரணம்,. கைபேசியில் வரும் மெசேஜ்கள், சமூக ஊடகக் கருத்துகள், WhatsApp குழுக்களில் பரவும் செய்திகள், இவை அனைத்தும் நாம் யோசிப் பதற்குள் நம்மை ஒரு பதிலுக்கு இழுத்துச் செல்கின்றன. மனம் அமைதியில்லாத வேளையில் அனுப்பப்படும் ஒரு குரல் செய்தி, அல்லது உண்மை தெரியாமல் பகிரப்படும் ஒரு தகவல், ஒரு குடும்பத்தையும் ஒரு சமூகத்தையும் கலக்கிவிட முடியும். இந்த இடத்தில் “வாயின் பாவம்” மட்டும் இல்லை, “விரல்களின் பாவம்” கூட இருக்கிறது: தட்டச்சில் எழுதுவது எளிது, ஆனால் அதன் விளைவுகளைச் சரிசெய்வது கடினம்.

ஆனால் இதற்கு எதிரான உண்மை ஒன்றும் உள்ளது. ஒரு நல்ல வார்த்தை, சரியான நேரத்தில் சொன்னால், அது மருந்தாக மாறும். “நான் உன்னை புரிந்துகொள்கிறேன்” என்ற ஒரு வாக்கியம் சண்டையை அடக்கலாம். “மன்னித்துவிடு” என்ற ஒரு சொல் ஒரு வீட்டை மீண்டும் ஒன்றிணைக்கலாம். “நீ மதிப்புள்ளவன்” என்று சொல்லப்படும் ஒரு ஊக்கம், ஒரு இளைஞனின் மன அழுத்தத்தை குறைக்கலாம். நாம் பேசுவது சிறியது போலத் தோன்றினாலும், அதன் தாக்கம் பெரியதாக இருக்கலாம். காரணம், சொற்கள் வெறும் ஒலிகள் அல்ல. சொற்கள் உறவுகளை உருவாக்குகின்றன, அல்லது உறவுகளை உடைக்கின்றன. நம் குடும்பத்தில் நம் சமூகத்தில் சமூகத்தொடர்புகளின் தாக்கத்தை உணர்ந்த நம் மறைமாவட்டம் இந்த ஆண்டை சமூகத்தொடர்புகளின் ஆண்டாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

***கருப்பொருளை அறிவித்தல் மற்றும் அதன் நோக்கத்தை விளக்குதல்***

இந்த ஆண்டில் நமது மறைமாவட்டம் ஒரு தெளிவான தீர்மானத்தை எடுத்துள்ளது. இவ் வருடத்தை “சமூகத் தொடர்பாடல் ஆண்டு” என அர்ப்பணித்துள்ளது. இது ஒரு பெயர்க் கொண்டாட்டம் அல்ல. இது ஒரு ஆன்மீக அழைப்பு, ஒரு குடும்பப் பணிமுயற்சி, ஒரு சமூகப் பொறுப்பு.

***1) “சமூகத் தொடர்பாடல்” என்றால் என்ன?***

நாம் “சமூகத் தொடர்பாடல்” என்று சொல்வது, வெறும் சமூக ஊடகம் மட்டும் அல்ல. அது நாம் தினமும் பயன்படுத்தும் எல்லா தொடர்பாடல் வழிகளையும் குறிக்கிறது. ஆனால் கிறிஸ்தவ இறையியல் வெளிச்சத்தில் இதைப் பார்க்கும்போது, தொடர்பாடல் என்பது வெறும் தகவல் பரிமாற்றம் அல்ல, உறவை உருவாக்கும் பணி, ஒன்றிப்பை காட்டும் அழைப்பு. ஏனெனில் கடவுள் தாமே உறவின் கடவுள். திரித்துவத்தில் தந்தை, மகன், பரிசுத்த ஆவி அன்பின் ஒன்றிப்பில் வாழ்கிறார். அந்தத் திரித்துவ அன்பின் உருவிலும் சாயலிலும் உருவான மனிதன், இயல்பாகவே உறவுக்காகவும் ஒன்றிப்புக்காகவும் படைக்கப்பட்டவன். மேலும் நம் விசுவாசத்தின் மையத்தில் கடவுள் தன்னை வெளிப்படுத்திய உண்மை உள்ளது. அவர் மௌனமாக இருந்து விடவில்லை அவர் பேசினார், அழைத்தார், வழி காட்டினார். அதிலும் உச்சமாக இயேசு கிறிஸ்து கடவுளின் முழுமையான “சொல்” ஆகி நம்மிடம் வந்தார். ஆகவே கிறிஸ்தவக் கண்களில் தொடர்பாடல் என்பது வெறும் செய்தியை அனுப்புவது அல்ல, அன்பால் வடிவான உண்மையை வழங்குவது, சாட்சியமாக வாழ்வது. இதனால் நாம் பேசும் சொற்களும், எழுதும் பதிவுகளும், பகிரும் செய்திகளும் நடுநிலையானவை அல்ல அவை கட்டவும் முடியும், உடைக்கவும் முடியும், குணப்படுத்தவும் முடியும், காயப்படுத்தவும் முடியும். இன்று கைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள், WhatsApp செய்தி பரிமாற்றங்கள், சமூக ஊடகப் பதிவுகள், பொதுவெளிப் பேச்சுகள் என்று மாறியிருந்தாலும், நமது நெறிப்பொறுப்பு மாறவில்லை. ஒவ்வொரு மனிதனும் கடவுளின் உருவம் என்பதால், திரை வழியாக பேசினாலும் நாம் அவரை மரியாதைக்குரிய நபராகக் காண வேண்டும். எனவே “சமூகத் தொடர்பாடல்” என்பது தொழில்நுட்பம் மட்டும் அல்ல அது அன்பின் பண்பு, உண்மையின் சாட்சி, ஒன்றிப்பின் சேவை.

***சமூகத் தொடர்பாடலின் பரப்பு***

சமூகத் தொடர்பாடல் என்பது கைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள், WhatsApp Messenger போன்ற செய்தி பரிமாற்றங்கள், Facebook Instagram TikTok YouTube போன்ற சமூக ஊடகங்கள், பொதுவெளியில் நாம் பேசும் வார்த்தைகள், நாம் எழுதும் பதிவுகள் மற்றும் பகிரும் செய்திகள் இவை அனைத்தையும் உள்ளடக்குகிறது. இதில் வதந்தி, கிண்டல், குற்றச்சாட்டு, விமர்சனம், மறைமுகச் சொற்கள் போன்றவை மட்டுமல்ல, அதேபோல ஆறுதல், நம்பிக்கை, உண்மை, மரியாதை நிரம்பிய வார்த்தைகளும் அடங்கும். எளிமையாகச் சொன்னால், எங்கள் வார்த்தையும், எங்கள் மௌனமும், எங்கள் பகிர்வும், எங்கள் பதிவும், எங்கள் பதிலும், பதில் இல்லாமையும் சமூகத் தொடர்பாடலின் ஒரு பகுதிதான்.

2) ஏன் இதை இப்போது முன்னிலைப்படுத்த வேண்டும்? இதற்கான காரணம் மிகத் தெளிவு. இன்று நாம் பார்க்கும் பல காயங்கள் பெரிய சண்டையிலிருந்து தொடங்குவதில்லை. ஒரு தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட செய்தி, ஒரு கசப்பான வார்த்தை, ஒரு அவசரமான பதிவு, ஒரு “seen” செய்துவிட்டு பதில் இல்லாமை போன்ற சிறிய விஷயங்களிலிருந்துதான் உறவுகள் மெதுவாக சிதைகின்றன.

***குடும்பத்தில்:***

குடும்பத்தில் அன்பு பேச வேண்டிய இடத்தில் மௌனம் வந்து உட்கார்ந்துவிடும் போது, அது வெறும் அமைதி அல்ல, உறவின் இடைவெளியாக மாறும். “வீடு” என்பது கிறிஸ்தவ பார்வையில் ஒரு சிறிய திருச்சபை, அங்கே அன்பு சொல்லாகவும் செய்கையாகவும் வெளிப்பட வேண்டும். கடவுள் தாமே தம் அன்பை மௌனமாக வைத்திருக்கவில்லை அவர் “வார்த்தையாய்” நம்மிடம் வந்தார். ஆகவே கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள் ஆகியோருக் கிடையில் நேருக்கு நேர் பேச வேண்டிய இடத்தில் “செய்தி” மட்டும் போகும் போது, உறவு மெதுவாக இயந்திரமாகிறது, இதயம் தூரமாகிறது. ஒரே கூரையின் கீழ் வாழ்ந்தாலும், ஒவ்வொருவரும் தனித்தனி திரைகளில், தனித்தனி உலகங்களில் வாழத் தொடங்குகிறார்கள். அந்த நிலையில்தான் சிறு தவறான புரிதல்கள் பெரிய பிளவுகளாக வளர்கின்றன. இதற்கு எதிராக, குடும்பம் திரித்துவ ஒன்றிப்பின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டுமெனில், நம் பேச்சு உண்மை, கருணை, மரியாதை ஆகியவற்றால் நிறைந்ததாக இருக்க வேண்டும் நேருக்கு நேர் சந்திப்புக்கும், கேட்பதற்கும், மன்னிப்பிற்கும் இடம் கொடுக்க வேண்டும். அப்போது சொற்கள் வெறும் ஒலி அல்ல, குடும்பத்தை கட்டும் அருளின் கருவியாக மாறும்

***இளைஞர்களில்:***

இளைஞர்களில் சமூக ஊடகம் சில நேரங்களில் அடையாள உணர்வை குழப்புகிறது, தன்னம்பிக்கையை குலைக்கிறது, ஒப்பீடு, பயம், தனிமை, மனச்சோர்வு போன்றவற்றை அதிகரிக்கிறது. தத்துவார்த்தமாக இதன் ஆழம் இதுதான்: இளைஞரின் “நான் யார்?” என்ற கேள்விக்கு பதில் கடவுளின் பார்வையிலிருந்து வர வேண்டிய இடத்தில், அது பல நேரம் “மற்றவர்கள் என்னை எப்படி பார்க்கிறார்கள்?” என்ற வெளிப்பார்வையிலிருந்து வரத் தொடங்குகிறது. வேதாகமத்தின் ஒளியில் மனிதன் கடவுளின் உருவிலும் சாயலிலும் உருவாக்கப்பட்டவன் ஆகவே அவன் மதிப்பு ‘பிடிப்பு’ எண்ணிக்கையிலும் ‘லைக்’ எண்ணிக்கையிலும் இல்லை, கடவுளின் அன்பிலும் அழைப்பிலும் உள்ளது. ஆனால் சமூக ஊடகம் தொடர்ந்து ஒப்பீட்டை ஊட்டி, உடல் தோற்றம், வாழ்க்கை நிலை, சாதனை, புகழ் ஆகியவற்றை அளவுகோலாக மாற்றும்போது, உள்ளம் “நான் போதுமானவன் இல்லை” என்ற பொய்யான குற்ற உணர்வில் விழுகிறது. இவ்வாறு வெளிப்பரிமாணத்தால் மதிப்பிடப்படும் மனநிலையே பயத்தை உருவாக்குகிறது, ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற அழுத்தம் தனிமையை பெருக்குகிறது, உள்ளத்தின் அமைதியைத் தகர்க்கிறது. இதற்கான கிறிஸ்தவப் பதில், இளைஞர்களை மீண்டும் அந்த அடித்தள உண்மைக்குக் கொண்டு வருவதுதான்: “நீ கடவுளின் மகன், மகள் உன் மதிப்பு உனக்கே உரியது நீ அழைக்கப்பட்டவன், நேசிக்கப்பட்டவன்.” அந்த உண்மையில் நிலைபெறும்போது, திரைகள் மனிதரை கட்டுப்படுத்தும் சங்கிலி அல்ல, நற்செய்திக்குச் சாட்சியமாகவும், நம்பிக்கையைப் பகிரும் கருவியாகவும் மாற முடியும்.

***பங்குச் சமூகங்களில்:***

ஒரு சிறிய தவறான செய்தி, ஒரு வதந்தி, ஒரு எளிதான குற்றச்சாட்டு,
ஒற்றுமையையும் அமைதியையும் சிதைக்கலாம்.
தேவாலயம் ஒன்றிப்பின் இடமாக இருக்க வேண்டிய இடத்தில் குழப்பத்தின் இடமாக மாறக்கூடாது.

***சமுதாயத்தில்:***

சமுதாயத்தில் மனிதரை “மனிதர்” என்று பார்க்காமல் ஒரு “விடயம்”, ஒரு “குழு”, ஒரு “பக்கம்” என்று பார்க்கத் தொடங்கினால், அது தத்துவார்த்தமாக மிகப் பெரிய வீழ்ச்சியாகும். ஏனெனில் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஒவ்வொரு மனிதனும் கடவுளின் உருவிலும் சாயலி லும் படைக்கப்பட்டவர் அவர் ஒரு கருத்து அல்ல, ஒரு “கேஸ்” அல்ல, ஒரு “எதிரணி” அல்ல, கடவுள் நேசிக்கும் ஒரு நபர். அந்த பார்வை மாறும்போது மனித மரியாதை குறைகிறது, ஒருவர் மற்றொருவரை மதிப்பது மங்குகிறது, வார்த்தைகள் எளிதில் காயப்படுத்தத் தொடங்குகின்றன. அதே நேரத்தில் உண்மையின் மதிப்பும் குறைகிறது, ஏனெனில் உண்மை இனி தேடப்படும் ஒன்றாக இல்லாமல், “என் பக்கம் வெல்ல” பயன்படும் ஆயுதமாக மாறிவிடுகிறது வதந்தி, அரை உண்மை, கற்பனை, வெறுப்பு நிறைந்த குற்றச்சாட்டு ஆகியவை வேகமாகப் பரவுகின்றன. இப்படியான சூழலில் அன்பின் மொழி பலவீனமாகிறது, உரையாடலின் இடத்தில் குற்றம்சாட்டு நிற்கிறது, சமாதானத்தின் இடத்தில் பிளவு வளர்கிறது. ஆகவே இது வெறும் “தொழில்நுட்ப பிரச்சனை” அல்ல இது இதயம் உருவாகும் விதத்தைப் பற்றிய பிரச்சனை. நாம் எந்த மொழியால் வாழ்கிறோம், எங்கள் வீடு எந்த மனநிலையால் கட்டப்படுகிறது, எங்கள் இளைஞர்கள் எந்த உலகத்தில் வளர்கிறார்கள் என்ற கேள்விகளே இங்கே முக்கியம் ஏனெனில் கிறிஸ்து நமக்கு கற்பித்தது வெறும் “சொல்ல” அல்ல, “அன்பில் உண்மை பேச”வும், அன்பால் ஒன்றிப்பை கட்டவும் தான். *( தொடரும்...)*

## நீங்கா நினைவில் 31ம் நாள்

'நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக் கொள்ளும் மனிதர் பேறு பெற்றோர்'



பிறப்பு 06 . 10 . 1956

இறப்பு 03 . 12 . 2025

அமரர்

**திரு. பெர்ணாண்டோ தர்மசீலன் (பயஸ்)**

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மண்டதீவு, நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர் திரு. பெர்ணாண்டோ தர்மசீலன் (பயஸ்) அவர்கள் 03-12-2025ல் காலமானதை அடுத்து அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 31ம் நாள் நினைவஞ்சலி இரங்கற் திருப்பலி ஆனையூர் புனித அடைகல நாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கபட்டது.
என்பதை அறியத்தருகிறோம்.

" நிலாமுற்றம் "
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

AD- 120

தகவல்
திருதிருமதி அருமைநாயகம்.



## நீங்கா நினைவில் 2ம் ஆண்டு



பிறப்பு 08 . 11 . 1946

இறப்பு 04 . 01 . 2024

**அமரர். இரத்தினம் செல்வரட்ணம்.**

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொண்ட திரு.இரத்தினம் செல்வரட்ணம் அவர்களின் விண்ணக வாழ்வின் 2ம் வருட நினைவுத்திருப்பலி 05-01-2026 திங்கள் காலை 6-15 மணிக்கு ஆனையூர் புனித அடைகல நாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கபட்டது. என்பதை அறியத்தருகிறோம்.

" நிலாமுற்றம் "
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை

தகவல்
திருதிருமதி அருமைநாயகம்.

AD - 122



## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவு

"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்"



மண்ணில் 23 . 06 . 1937

விண்ணில் 27 . 01 . 2024

**அமரர். ஞா.றொ.இராஜசிங்கம்**

அன்பான எம் உறவே அடியவர் மனங்களில்
நிறைந்து அண்டியவர் எல்லோருக்கும்
அன்பின் ஆலோசகராய் வாழ்ந்தீர்
என்றும் உங்களை நினைக்கிறோம்
எல்லாம் வல்ல இறைவனின் நிழலில்
எக்காலமும் இன்பமாய் வாழ
எங்களிற்காய் இறைவனிடம் வேண்டுங்கள்.

மிருசுவில்

AD/118

உங்களை என்றும் மறவாத
உறவுகள்



## நீங்கா நினைவில் 35ம் வருடம்



பிறப்பு 13 . 10 . 1920

இறப்பு 31 . 01 . 1991

**அமரர். பார்பராம்மா ஞானப்பிரகாசம் (குணம்)**

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பார்பரம்மா ஞானப்பிரகாசம் (குணம்) அவர்களின் விண்ணக வாழ்வின் 35ம் ஆண்டு நினைவுத் திருப்பலி 31-01-2026 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு ஆனையூர் புனித அடைகல நாயகி ஆலயத்தில் இரங்கற்பலி
ஒப்புக்கொடுக்கப்படும். என்பதை அறியத்தருகிறோம்.

உயரப்புலம்
ஆனைக்கோட்டை
17.01.2026

AD - 123

அன்புடன் பிரிவகலாத
குடும்பத்தினர்



## நீங்கா நினைவில் 6ம் வருடம்



பிறப்பு 14 . 02 . 1947

இறப்பு 03 . 02 . 2020

**அமரர். சவரிமுத்து ஆரோக்கியநாதர்**

ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது
(தி.பா. 115:15)

இல. 76, புலோலி தெற்கு,
புலோலி.

AD/119

அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்



## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத
நிலையை நான் அடைய வழி காட்டும்
பரிசுத்த ஆவியே, உமது திருநாமம்
அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடை
களின் மூலம் என் உள்ளத்தைப்
பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்
தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே,
என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும்
எனக்கு உற்றதுணையான உமக்கு
இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும்
சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.
என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக
இருப்பினும் எக் காரணம் கொண்டும்
உம்மிலிருந்து விலகாமல்
என்றும் நிலைத்திருப்பேனென
உறுதி கூறுகின்றேன்.
நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும்
என்றென்றும் உமது முடிவில்லா
மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

(உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்த 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும். இச் செபத்தைப் பிரிசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்)

(AD- 117 )

ஓர் அடியாள்.


## உண்மையை நோக்கி பயணிக்க இளைஞர்களுக்கு அழைப்பு!

"உரோமை நகரின் இளைஞர்கள் வெறும் மேலோட்டமான இணையவழித் தொடர்புகளோடு திருப்தி அடைந்துவிடக் கூடாது" என்றும், "அதற்குப் பதிலாக கடவுளையும் மற்றவர்களையும் நேரில் சந்திப்பதன் மூலம் கிடைக்கும் ஆழமான உண்மை, நற்பண்பு மற்றும் உறவு நிலையைத் தேட வேண்டும்" என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

கடந்த 10ம் திகதி வத்திக்கானின் திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அரங்கில் உரையாற்றியபோது இவ்வாறு கூறினார் திருத்தந்தை.

நாம் அனைவரும் எப்போதும் இணைய வழி தொடர்பில் இணைக்கப்பட்டிருந்தாலும், இன்று பலர் அனுபவிக்கும் தனிமை மற்றும் திசைதெரியாத நிலை குறித்து வெளிப்படையாகப் பேசிய திருத்தந்தை, உண்மையான பிணைப்பு என்பது விசுவாசத்திலேயே காணப்படுகிறது என்பதை வலியுறுத்தினார்.

மேலும், இணையதளத் தொடர்புகள் அதிகரித்தாலும் இளைஞர்களிடையே பெருகிவரும் தனிமை குறித்துப் பேசிய திருத்தந்தை, புகழ்பெற்ற கவிஞர் சால்வதோர் குவாசிமோதோவின் கவிதை வரிகளை மேற்கோள் காட்டி அவற்றை விசுவாசத்தின் ஒளியில் மறுபரிசீலனை செய்தார்.

"இதயத்தைத் துளைக்கும் அந்தக் கதிர் என்பது வந்து போகும் தற்காலிகமான ஒளியல்ல" என்றும், "அது தோன்றி மறையும் மினுமினுப்பும் அல்ல, மாறாக அது நீதியின் கதிரவன், அவரே கிறிஸ்து" என்றும் கூறினார் திருத்தந்தை.

## “ஒன்றிணைந்த தலைமைத்துவம் மற்றும் உளவியல் ஆற்றுப்படுத்தல்” செயலமர்வு



யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை மாணவத் தலைவர்களை இணைத்து முன்னெடுக்கப்பட்ட “ஒன்றிணைந்த தலைமைத்துவம் மற்றும் உளவியல் ஆற்றுப்படுத்தல்” செயலமர்வு கடந்த 13ஆம் திகதி கோப்பாய் அமலமரித் தியாகிகளின் “சங்கமம்” இல்லத்தில் நடைபெற்றது. திருக்குடும்ப கன்னியர் மட பழைய மாணவிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை செல்வரட்ணம், முல்லைத்தீவு அமதித்தென்றல் உளவியலக இயக்குனர் அருட்தந்தை விஜேந்திரன் மற்றும் அவரது குழுவினர் வளவாளர்களாக கலந்து கருத்துரைகள், தலை மைத்துவ பயிற்சிகள், குழுச்செயற்பாடுகள் ஊடாக மாணவர்களை நெறிப்படுத்தினர். இந்நிகழ்வில் 45 வரையான மாணவத்தலைவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

## அருட்தந்தை மேரி பஸ்ரியன் அவர்களின் 41ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு



மன்னார் வங்காலை புனித அன்னாள் ஆலயத்தில் இலங்கை படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அருட்தந்தை மேரி பஸ்ரியன் அவர்களின் 41ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு மல்வம் திருக் குடும்ப ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட அஞ்சலி நிகழ்வு கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்றது. ஆலய மணிக் கோபுரத்தில் அமைந்துள்ள அருட்தந்தை மேரி பஸ்ரியன் அவர்களின் உரு வச்சிலைக்கு பங்குத்தந் தையால் மலர் மாலை அணிவிக்கப்பட்டதுடன் பங்கும க்களால் அருட்தந்தையின் உருவ ப்படத் திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தொட ர்ந்து இரங்கல் திருப்பலியும் இடம்பெற்றன.

## யாழ். திருமறைக்கலாமன்ற பொங்கல் நிகழ்வுகள்



யாழ். திருமறைக்கலாமன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட பொங்கல் நிகழ்வுகள் 15ஆம் 17ஆம் திகதிகளில் நடைபெற்றன. கடந்த 15ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள மன்ற அலுவ லகத்தில் பொங்கல் நிகழ்வும் தொடர்ந்து மாட்டீன் வீதியில் அமைந்துள்ள கலை ஞானசுரபி தியான இல்லத்தில் செபமாலை தாசர் சபை அருட்தந்தை ஜோசப் அவர்களின் தலைமையில் பண்பாட்டு திருப்பலியும் இடம் பெற்றன. தொடர்ந்து 17ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றக் கலைத்தூது கலையகத்தில் பொங் கல்விழா கலைநிகழ்வுகள் நடைபெற்றன. மன்றபிரதி இயக்குநர் திரு. ஜோண்சன் ராஜ்குமார் அவர்களின் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனம், சட்டத்தரணி ஜொணி மதுரநாயகம் அவர்களின் கவிதை அளிக்கை, திருமறைக்கலாமன்ற கலை ஞர்களின் மரபுவழி நாடகப் பாடல்கள் என்ப வற்றுடன் திருமறை க்கலா மன்ற இளையோர் அவையினரின் “வேடஜாலம்” நவீன நாடகமும் மேடை யேற்றப்பட்டன.

## ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான Cool டெனிஸ் போட்டி



கொழும்பு அகில இலங்கை ரெனிஸ் சம்மேளனத்தில் ஏற்பாட்டில் தேசிய ரீதியில் முன் னெடுக்கப்பட்ட ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான Cool டெனிஸ் போட்டி கடந்த 7ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை கொழும்பு அகில இலங்கை ரெனிஸ் சம்மேளன மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்குபற்றிய யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் தரம் 2 மாண வர்கள் Red ball போட்டியில் முதலிடத்தையும் தரம் 4 மாணவர்கள் Orange ball போட்டியில் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டதுடன் தரம் 5 மாணவர்கள் Green ball போட்டியில் காலிறுதிச் சுற்று வரையிலும் முன்னேறினர்.

## மானிப்பாய் புனித அன்னாள் ஆலய மறைக்கல்வி மாணவர்களுக்கான பயிற்சி பட்டறை



மறைக்கல்வி மாணவர்களிடையே இசைக்கருவிகள் மீட்டும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் முகமாக மானிப்பாய் புனித அன்னாள் ஆலய இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட ஆலய மறைக்கல்வி மாண வர்களுக்கான பயிற்சிபட்டறை தை மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மானிப்பாய் புனித அந்தோனியார் நற்செய்தி அறிவிப்பு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திரு. சுதன் அவர்கள் வளவாளராக கலந்து இசைக்கருவிகளை மீட்டும் பயிற்சிகள் ஊடாக மாணவர்களை வழிப்படுத்தினார். இந்நிகழ்வில் 50 மாணவர்கள் பங்குபற்றி பயனடைந்தனர்.

## உரும்பிராய் புனித மிக்கேல் அபிவிருத்திக்குழுவின் நிதி உதவி




உரும்பிராய் புனித மிக்கேல் அபிவிருத்திக்குழுவின் புலம்பெயர் உறவுக ளின் பங்களிப்புடன் மன்னார் நானாட்டான் பகுதியில் மடுக்கரை கிராமத்தில் 80 குடும்ப ங்களுக்கு 8000 ரூபா பெறுமதியான உணவு பொதியும் சமையல் உபகர ணங்களும் வழங்கி வைக்கபட்டது. புலம் பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் முதலாம் கட்ட நிவாரணப்பணி சிறப்பாக நடைபெற்றது.

## சமூகதொடர்பாடல் ஆண்டை மையப்படுத்திய குருக்களுக்கான சிறப்பு கருத்தமர்வு



யாழ். மறைமாவட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ள சமூகதொடர்பாடல் ஆண்டை மையப்படுத்திய குருக்களுக்கான சிறப்பு கருத்தமர்வு தை மாதம் கடந்த 12ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊடகவியலாளர் திரு. அமிர்தநாயகம் நிக்ஸன் அவர்கள் வளவாளராக கலந்து கருத்துரை வழங்கினார். கருத்துரையை தொடர்ந்து யாழ் மறைமாவட்டத்தில் இயங்கும் ஆணைக்குழுக்களுக்கான இவ்வருட செயற்திட்ட வரைபுகளை தயாரிக்கும் குழுக்கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருடாந்த செயற்திட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அவை தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.


## தும்பளை புனித லூர்து மாதா திருத்தலப் பெருவிழா

**02.02.2026 – 11.02.2026**

02.02.2026 - நவநாள் வழிபாடுகள் - திருச்செபமாலை மாலை 4.30 மணி
10.02.2026 - நற்கருணை தினம் - திருச்செபமாலை மாலை 5.00 மணி

யாழ்.மறைமாவட்டக் குரு முதல்வர்
அருட்தந்தை ப. யோ. ஜெபரட்ணம் தலைமையில்

11.02.2026 (புதன்கிழமை) - திருத்தலப் பெருவிழா
திருப்பலிகள்
காலை 5.30 மணி
காலை 7.00 மணி

யாழ். மறைமாவட்ட ஆயர்
பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை
தலைமையில் நடைபெறும்



திருத்தலப் பரிபாலகர்


## பண்டத்தரிப்பு பங்கில் செயற்பாட்டு மகிழ்வோம் சிறப்பு நிகழ்வு



மறைக்கல்வி மாணவர்களையும் மறையாசிரியர்களையும் இணைத்து பண்டத்தரிப்பு பங்கில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாட்டு மகிழ்வோம் சிறப்பு நிகழ்வு கடந்த 11ஆம் திகதி புனித பற்றிமா அன்னை மறைப்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அருட்சகோதரர் ஸ்டீபன்ராஜ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் பங்குத்தந்தை அருட்தந்தை யேசுதாஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். புனித மரியன்னை பேராலய உதவிப்பங்குத்தந்தை அருட்தந்தை றொகான் டியோனி அவர்கள் வளவாளராக கலந்து குழுச்செயற்பாடுகள், விளையாட்டுக்கள், தீப்பாசறை என்பவற்றின் ஊடாக மாணவர்களை நெறிப்படுத்தினார். இந்நிகழ்வில் 94 மாணவர்களும் 11 மறையாசிரியர்களும் பங்குபற்றி பயனடைந்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு தை மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.